

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

7-ஆம் திருமொழி - ஐயபுழுதி

*

* ஐயபுழுதிஉடம்பளந்து இவள்பேச்சுமலந்தலையாய் *
செய்யநூலின்சிற்றாடை செப்பெனுடுக்கவும்வல்லளல்லள் *
கையினில்சிறுதூதையோடு இவள்முற்றில்பிரிந்துமிலள் *
பையரவணைப்பள்ளியானொடு கைவைத்துஇவள்வருமே. (1)

வாயில்பல்லும்எழுந்தில மயிரும்முடிகூடிற்றில *
சாய்விலாதகுறுந்தலைச் சிலபிள்ளைகளோடிணங்கி *
தீயிணக்கிணங்காடிவந்து இவள்தன்னன்செம்மைசொல்லி *
மாயன்மாமணிவண்ணன்மேல் இவள்மாலுறுகின்றாளே. (2)

பொங்குவெண்மணல்கொண்டு சிற்றிலும்முற்றத்திழைக்கலுறில் *
சங்குசக்கரம்தண்டுவாள் வில்லுமல்லதுஇழைக்கலுறாள் *
கொங்கைஇன்னம்குவிந்தெழுந்தில கோவிந்தனோடுஇவளை *
சங்கையாகிஎன்னுள்ளம் நாள்தொறும் # தட்டுளுப்பாகின்றதே. (3)

ஏழைபேதைஓர்பாலகன்வந்து என்பெண்மகளையெள்கி *
தோழிமார்பலர்கொண்டுபோய்ச் செய்தசூழ்ச்சியையார்க்குரைக்கேன்?
ஆழியானென்னுமாழமோழையில் பாய்ச்சிஅகப்படுத்தி *
மூழையுப்பறியாததென்னும் மூதுரையுமிலளே. (4)

நாடும்ஊரும்அறியவேபோய் நல்லதுழாயலங்கல்
சூடி * நாரணன்போயிடமெல்லாம் சோதித்துழிதருகின்றாள் *
கேடுவேண்டுகின்றார்பலருளர் கேசவனோடுஇவளை *
பாடுகாவலிடுமினென்றென்று பார்த்தடுமாறினதே. (5)

பட்டம்கட்டிப்பொற்றோடுபெய்து இவள்பாடகமும்சிலம்பும் *
இட்டமாகவளர்த்தெடுத்தேனுக்கு என்னோடுஇருக்கலுறாள் *
பொட்டப்போய்ப்புறப்பட்டுநின்று இவள்பூவைப்பூவண்ணாவென்னும் *
வட்டவார்குழல்மங்கையீர்! எவள்மாலுறுகின்றாளே. (6)

பேசவும்தெரியாதபெண்மையின் பேதையேன்பேதைஇவள் *
கூசமின்றிநின்றார்கள்தம்மெதிர் கோல்கழிந்தான்மூழையாய் *
கேசவாவென்றும்கேடிலீயென்றும் கிங்சுகவாய்மொழியாள் *
வாசவார்குழல்மங்கைமீர்! இவள்மாலுறுகின்றாளே. (7)

பேசவும்தெரியாதபெண்மையின் பேதையேன்பேதைஇவள் *
கூவமின்றிநின்றார்கள்தம்மெதிர் கோல்கழிந்தான்மூழையாய் *
கேசவாவென்றும்கேடிலீயென்றும் கிஞ்சுகவாய்மொழியாள் *
வாசவார்குழல்மங்கைமீர்! இவள்மாலுறுகின்றாளே. (8)

கைத்தலத்துள்ளமாடழியக் கண்ணாலங்கள்செய்து * இவளை
வைத்துவைத்துக்கொண்டுஎன்ன @ வாணிபம்? நம்மைவடுப்படுத்தும் *
செய்த்தலையெழுநாற்றுப்போல் அவன்செய்வனசெய்துகொள்ள *
மைத்தடமுகில்வண்ணன்பக்கல் வளரவிடுமின்களே. (9)

பெருப்பெருத்தகண்ணாலங்கள்செய்து பேணிநம்மில்லத்துள்ளே *
இருத்துவானெண்ணிநாமிருக்க இவளும்ஒன்றெண்ணுகின்றாள் *
மருத்துவப்பதம்நீங்கினாளென்னும் வார்த்தைபடுவதன்மு *
ஒருப்படுத்திடுமின்இவளை உலகளந்தானிடைக்கே. (10)

* ஞாலமுற்றும்உண்டு ஆலிலைத்துயில் நாராயணனுக்கு * இவள்
மாலதாகிமகிழ்ந்தனளென்று தாயுரைசெய்ததனை *
கோலமார்பொழில்சூழ்புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்ன *
மாலைபத்தும்வல்லவர்கட்கு இல்லைவருதுயரே. (11)

அடிவரவு : ஐய வாயில் பொங்கு ஏழை நாடு பட்டம் பேச காறை கைத்தலத்து பெரு ஞாலம் நல்லது.

@ தட்டுளுப்பு- தடுமாற்றம் # வாணிபம்-பிரயோஜனம்

---